**சுருக்கம்**

கோயம்புத்தூர் மாநகராட்சி – நகரமைப்பு – வடக்கு மண்டலம், வார்டு எண்.41 தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் அமைக்கப்பட்ட காந்திமாநகர் மனைப் பிரிவில் உள்ள சமுதாயக் கூடம் மற்றும் இடம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் நிர்ணயம் செய்த விற்பனை விலை ரூ.5,13,38,000/–க்கு மாநகராட்சி பெயரில் பொதுக் கணக்கிலிருந்து கிரயம் செய்தல் – அனுமதி அளித்து –ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.2) துறை**

அரசாணை (நிலை) எண். 38 நாள்: 04.03.2014
திருவள்ளுவர் ஆண்டு 2045
விஜய, மாசி மாதம்

படிக்கப்பட்டது.

1. கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.620/2013/எம்.எச்.5, நாள்20.12.2013.
2. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித எண்.48141/2013/ மாநஅ3, நாள் 06.01.2014.

------

**ஆணை:**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம், வார்டு எண்.41க்கு உட்பட்ட பகுதியில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால், கணபதி கிராமம், க.ச.எண்கள். 26, 27, 28 பாகம். 29–39, 48, 49, 50, 52, 53, 54, 55/2பி மற்றும் 40/2, 43/2, 45, 46, 47–ல் அமைக்கப்பட்ட, காந்தி மாநகர் பேஸ்–I,II மற்றும் III மனைப்பிரிவில் உள்ள சமுதாய கூடம் மற்றும் இடத்தினை குறைந்த வாடகை அல்லது குத்தகை அடிப்படையில், மாநகராட்சிக்கு ஒப்படைக்க மாமன்ற தீர்மானம் எண்.217, நாள்.24.09.2012ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு அனுப்பப்பட்டது என்றும், செயலர் மற்றும் பணியாளர் அலுவலர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சென்னை அவர்களின் 04.11.2013ம் தேதிய கடிதத்தில், மேற்படி சமூக நலக்கூடத்துடன் கூடிய நிலத்திற்கான விற்பனை விலை ரூ.5,13,38,000/– (ருபாய் ஐந்து கோடியே பதிமூன்று லட்சத்து முப்பத்து எட்டாயிரம் மட்டும்) என நிர்ணயம் செய்து மேற்படி தொகையினை செலுத்தி நிலக்கிரயம் செய்து கொள்வதற்கு சம்மதம் தெரிவிக்கும்பட்சத்தில் சமுதாய நலக்கூட இடத்தினை ஒதுக்கீடு செய்வது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டதாகவும், கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர், தெரிவித்துள்ளார்.

2. மேலும், இதன் அடிப்படையில், மாநகராட்சி மாமன்றம் தனது தீர்மானம் எண்.289, நாள்.14.11.2013–ல் நிலக்கிரயத் தொகையை, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு செலுத்தி மாநகராட்சி பெயரில் நிலக்கிரயம் செய்ய தீர்மானம் நிறைவேற்றியுள்ளது என்றும், மேற்படி சமுதாய கூடம் மற்றும் இடத்திற்கான (இடத்தின் பரப்பு 38,371 சதுரடி மற்றும் கட்டிடத்தின் பரப்பு 2700 சதுரடி) நிலக்கிரயத் தொகை ரூ.5,13,38,000/– (ரூபாய் ஐந்து கோடியே பதிமூன்று லட்சத்து முப்பத்து எட்டாயிரம் மட்டும்)ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு செலுத்தி, மாநகராட்சி பெயரில் நிலக்கிரயம் செய்ய உரிய ஆணை பிறப்பிக்குமாறு கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் கோரியுள்ளார்.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், நகராட்சி நிர்வாக ஆணையர் மேற்கண்ட கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளரின் செயற்குறிப்பினை அரசுக்கு உரிய ஆணை வேண்டி அனுப்பியுள்ளார்.

4. மேற்கண்ட செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தபின், கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம் வார்டு எண்.41–ல் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கணபதி கிராமத்தில் அமைக்கப்பட்ட காந்திமாநகர் பேஸ்–I,II மற்றும் III மனைப்பிரிவில் உள்ள சமுதாய கூடம் மற்றும் இடத்தினை நிலக்கிரயத் தொகை ரூ.5,13,38,000/– (ரூபாய் ஐந்து கோடியே பதிமூன்று லட்சத்து முப்பத்து எட்டாயிரம் மட்டும்)ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு செலுத்தி மாநகராட்சி பெயரில் நிலக்கிரயம் செய்திட கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க. பணீந்திர ரெட்டி**
**அரசு செயலாளர்.**

**பெறுநர்**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 600 005
ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூர்.
செயலாளர் மற்றும் பணியாளர் அலுவலர்,
தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை – 600 035.

**நகல்**

மாண்புமிகு அமைச்சர் (ந.நி. ஊ.வ. சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள்),
அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 600 009
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளரின்
தனிச்செயலாளர், சென்னை – 600 009
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2)துறை, சென்னை– 600 009.

இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

பிரிவு அலுவலர்.